# SICAL CFS

ஏற்றுமதி இறக்குமதி சரக்காளும் பெட்டகமாய்,
சீர்மிகு சென்னைக்கு வடபுறத்தின் பணியகமாம்;
கொள்கலனாய் குவிந்துப் போகும் நிலையகமாம்!.
சீலமாய் வாழ்ந்த பெருமைமிகு நகரத்தார்,

வழிவந்தார் வாணிபம் செய்யும் இடமிதுவாம்!
செப்பணிட்டத் தரையெல்லாம் நீரால் சூழ்ந்து,
சேறாய்ச் சூழ்ந்து நிற்கும் காகித கூளங்கள்.
சீர்செய்வார் எவருண்டு? "கொள்கலன்கள்"

குவிந்துப் போக, அங்குமிங்கும் அலைந்தாடும் "தூக்கிகள்"
முழங்கால் சேற்றுக்குள் பணிசெய்ய 'முகவர்கள்' எமை அழைப்பர்;
பரிதாப நிலைகொள்ளும் 'கொள்கலன்' சரக்குகளாய் நாங்களும்
அசைந்தாடிப் பணிமுடித்தால், கால்சட்டை அடியணியில்(காலணி),

காகிதச் சேறன்றோ புதியதாய் வண்ணம் பூசும்!
பெருமைமிகு நகரத்தார் பேர்சொல்லி வழிவந்தோர்,
அமரக்கொடுத்த இடம் அடுத்தபடி கதை சொல்லும்;
சிறையகத்தைப் போன்றதொரு சிறிய அறை,

இணக்கமுடன் பணி செய்ய ஏலாத வகையில் மேசை,
'கோப்பு'களை வைத்துப் பார்க்க குறைவான இடமே அங்கு!
'குளிரூட்டம்' குறைந்து சிலநாள் கொஞ்சி வழியும் வியர்வை!
இத்துடனே கணினியும் சிலநேரம் அற்று விடும்!

என்செய்வோம் நாங்கள்?; அழைத்துச் சொல்வோம்;
சொல்லிப் பார்த்தோம் செயலுண்டோ! சுகமுண்டோ!
குமிழ்சிரிப்பில் மறைந்துவிடும் 'குறுந்தாடி' "மோகனராசு"
அசட்டுச் சிரிப்பில் அகன்றுவிடும் "துளசிராமன்"

காதாரக் கேட்காத 'தலைமை' "தண்டபாணி"
தமிழ்மாண்பும், தமிழ்மரபும் தகவுடனே காக்கும்,
தமிழருள் ஒருவராம் நகரத்தார் வழிவந்தோர்; ஏனோ
எங்களுக்குப் பணியிடத்தைச் சீராக்கி, நிறைவான

இருக்கைகளும், இன்னபிற வசதிகளும் செ(ய்)யமறுத்தார்?
அழகான ஆங்கிலத்தில் குரலெழும்பிக் கூறிப்பார்த்தும்,
அதிகார வரைமுறையை அடுத்துச் சொல்லிப் பார்த்தும்,
அசையாத மலையானார் ஏதும் பலனிலையே!

கு.ப. அசோகன்,
05-11-2005 (0.45 A.M.)